திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமைகள் பற்றி நேற்று இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கூட, மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், தங்கள் கருத்துக்களை வலியுறுத்துகின்ற வகையில் மேற்கொண்டு உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். கோவையிலும், மதுரையிலும், என்னுடைய குழந்தையும் கூட சாகும் வரை மற்றவர்களோடு சேர்ந்து உண்ணாவிரதம் இருப்பதாகத் தகவல் அந்த மாணவர்கள் எல்லோரும் இப்போது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட மாணவர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசமுடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சரைக் கேட்டுக் சொல்கிறேன்.

(ஈ) ராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நிகழ்ச்சி நிரலை 30 நாட்களுக்கு தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள், பிறகு தேவைப்பட்டால், எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கையின் மீதான விவாதத்திற்கு ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டு............(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லி, அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப்பற்றி பேசச் சொல்லுங்கள். அப்போது அதைப்பற்றிப் பேசி, முடிவு எடுக்கலாம்.

3. ஒழுங்குப் பிரச்சினை.

அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாதபோது அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம். டாக்டர் சமரசம் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவையில் இல்லை. என்றாலும், அதற்கான பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

1984 மார்ச் 29]

Thiru R. UMANATH: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். The member has to call the attention of the Minister. . .. ஏற்கனவே நீங்கள் இதுபற்றி ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறீர்கள்.

MR. SPEAKER: ''Provided further that the Speaker *suo motu* may direct that the statements on the matter may be made if the importance of the subject so warrants'' என்று போட்டிருக்கிறது. எனவே அதற்கான பதிலைக் கொடுக்கும்படி நான் அமைச்சரிடம் சொல்லலாம்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், அறிவிப்பு கொடுத்த உறுப்பினர் வராத போது, பிரச்னை முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதி தாங்களே அதற்கான பதிலை அளிக்கும்படி அமைச்சருக்குச் சொல்கிறேன் என்றால், நாளைக்கு இதே மாதிரி நிலைமை இந்த பக்கத்தில் வந்தால், நீங்கள் அனுமதிக்க வேண்டும்.

If you allow now, you will have to allow from this side also. That is my point.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியிலே என்ன சொல்லியிருக்கிறது என்றால், "Provided that if the member who has given notice is unavoidably absent, any other member with the permission of the Speaker may call the attention of the Minister on his behalf'' என்று இருக்கிறது. அந்த வகையில், திரு. மாணிக்கம் அவர்கள் படித்ததாக நினைத்துக் கொண்டு வேண்டுமானாலும், அமைச்சர் பதில் சொல்லலாம். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சமரசத்திற்குப் பதிலாக, உறுப்பினர் மாணிக்கம் அவர்கள் படித்ததற்குப் பின்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

திரு எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, ''தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பகுதியில் பாசனக் கால்வாயில் கழிவு நீர் கலப்பதால், மக்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவர அறிக்கை அவை முன்னால் வைக்கப்படவில்லை (குறுக்கீடு).

[1984 மார்ச் 29

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்படாத நிலை இருக்குமானால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்மிடம் உள்ள அறிக்கையை முழுவதும் படித்துவிட லாம். (குறுக்கீடு).

திரு. ரா உமாநாத்: பிரியர் பெர்மிஷன் என்று சொல்லி இருந்தால், பிரச்சினை வந்திருக்காது. இப்போது நிலைமை என்ன என்றால், Paper is not laid on the table of the House. அவையினுடைய மரியாதையைக் காப்பாற்றுவதற்கு, அவையில் அறிக்கை வைக்கப் பெறாததால், இதை ஒத்திவைத்தால்தான் நல்லது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை சிறியதாக இருந்தால் அமைச்சர் அவர்கள் படித்துவிடலாம். (குறுக்கீடு).

(முற்பகல் 10-10)

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, லோக் சபா விலே உங்களுக்குத் தெரியும். கால் அட்டென்ஷனுக்கான ஸ்டேட் மெண்ட்டை ½ மணி முன்னதாக ஹவுசிலே வைக்க வேண்டும் என்று இருக்கிறது. நம்முடைய அவையிலே பிராக்டீஸிலே இருப் பது என்னவென்றால், சபை கூடுவதற்கு முன்னாலேயே, நாங்கள் இங்கே வரும்போதே அந்த அறிக்கை ரெடியாக இருக்கும். நாங் கள் அவை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அதை படித்து விடு வோம். ஆகவே, இது மாதிரி ஒரு பிராக்டீஸ் நல்லதல்ல......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமது விதிமுறைகளில் அவ்வாறு இல்லை. அறிக்கை ஒரு பக்கத்திற்கு மேல் இருந்தால் தான் அவையில் வைப்பது வழக்கம். அதற்கு மேல் போக வில்லையென்றால், படிப்பதுதான் வழக்கம். அவையில் வைப்பது இல்லை. ஆயினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சனிக்கிழமையன்று எடுத்துக் கொள்ளலாம்.

4. அரசினர் சட்டமுன்வடிவு.

கடன் நிவாரண (திருத்த) சட்டமுன் வடிவு 1984.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.